**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**
**THIRUVIDAIMARUTHUR**

| | |
|---|---|
| Calender : <br> Miscellaneous : <br> Preliminary Register : STC.227/2019 <br> Sessions : <br> Deposition of Witness for : LW-2/PW- 2 <br> Name : முருகானந்தம் <br> (சிறப்பு உதவி ஆய்வாளர்) <br> Father's/Husband's Name : மாரியப்பன் <br> Nationality : Indian | Village: தஞ்சாவூர் <br> Age :53 <br> Taluk : <br> Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 11.02.2026**

சாட்சியை மதுவிலக்கு அமல் பிரிவு தலைமை காவலர் திரு. அருள்செல்வம் என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜரில் இல்லை. அவரது தரப்பில் 317 குவிமுச பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை:**

நான் தற்போது கும்பகோணம் தாலுக்கா காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு கும்பகோணம் மதுவிலக்கு அமல் பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்தபோது 01.09.2017 ம் தேதி காலை 11.30 மணியளவில் கும்பகோணம் மதுவிலக்கு அமல் பிரிவு காவல் ஆய்வாளர் கமலக்கண்ணன் மற்றும் நுண்ணறிவு பிரிவு காவல் ஆய்வாளர் ராஜூ நுண்ணறிவு பிரிவு சிறப்பு உதவி ஆய்வாளர் சேது நாராயணனுடன் நானும் தலைமை காவலர் 1180 சண்முகசுந்தரம் ஆகியோருடன் திருப்பனந்தாள் காவல் நிலைய சரகம் திருப்பனந்தாள் மெயின்ரோடு அரசு மதுபான கடை அருகே எங்களை கண்டதும் ஓட முயற்சித்தவர் பின்பு பெயர் விலாசம் கேட்டு

தெரிந்த ராஜிவ்காந்தி வயது 28/2017, த/பெ. கலியபெருமாள், வடக்கு தெரு, திருப்பனந்தாள் என்பவர் போலிசார் எங்களை கண்டது ஓட முயற்சித்தவரை சுற்றி வளைத்து பிடித்தபோது அவர் நின்றிருந்த இடத்தில் அவரை சோதனை செய்தபோது சுமார் 10 லிட்டர் பிடிக்கக்கூடிய பாலிதின் பையில் 5 லிட்டர் பாண்டி மாநில சாரயமும் 180 எம் எல் Bennis Brandy பாட்டில்கள் 24ம் , King fisher beer 750 ml 9ம் மற்றும் 375 எம் எல் black bearl பிராந்தி பாட்டில்கள் மூடி திறந்த நிலையில் 7 பாட்டில்களும், விற்ற பணம் ரூ.30430/– இருந்தது. மேற்படி பாண்டி மாநில சாராயம் மற்றும் பிராந்தி பாட்டில்களை வெளிநபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் என்னுடன் வந்த தலைமை காவலர் சண்முகசுந்தரம் முன்னிலையில் ஆய்வாளர் கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகசரில் நானும் தலைம காவலர் சண்முகசுந்தரமும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாது கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பம் அசாஆ 3 ஆகும். பாண்டி சாராயம் 650 எம் எல் பிடிக்கக்கூடிய பாட்டில்களில் 500 எம் எல் சாம்புல் எடுத்தார். மீதமுள்ள சாராயத்தை காவல் ஆய்வாளர் அழிப்பு மகசரில் கொட்டி அழித்தார். அந்த அழித்தல் மகசரில் நானும் தலைமை காவலர் சண்முகசுந்தரமும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் அழித்தல் மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பம் அசாஆ 4 ஆகும். பின்பு எதிரி மற்றும் தடய பொருளுடன் அன்றைய தினம் 12.30 மணிக்கு நிலையம் வந்து நிலைய குற்ற எண்.463/2017 சட்ட பிரிவுகள் 4(1)(a). 4 (1)(i) r/w 4(1)(A) TNPAct படி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்து எதிரியை பாரா வசம் ஒப்புவித்தார். காவல் ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் பணி செய்த காவல் நிலையத்திற்கும் சம்பவ இடத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 20 கி.மீ இருக்கும். நான் காவல் நிலையத்திலிருந்து எத்தனை மணிக்கு புறப்பட்டேன் என்றால் சுமார் 10.30

மணியிருக்கும். நான் காவல் நிலையத்திலிருந்து புறப்பட்டு நேரடியாக திருப்பனந்தாள் சென்றேனா என்றால் சரிதான். ரகசிய தகவல் வந்ததால் நேரடியாக திருப்பனந்தாள் சென்றோம். எதிரி நின்ற இடத்தில்தான் சோதனை செய்ததாக முன்விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். எதிரி கையில் எந்த பொருளும் வைத்திருந்ததாக கூறவில்லை என்றால் சரிதான். பொதுவாக போலிசார் வரும்போது பொதுமக்கள் அருகில் திடீரென வந்தால் விலகி செல்வது வழக்கம் என்றால் சரிதான். ஆய்வாளர் கைப்பறிய தடய பொருட்கள் பாண்டி மாநில சாராயம் மற்றும் மது பாட்டில்கள் எதிரியின் கையிலிருந்து கைப்பற்றவில்லை என்றால் சரிதான். எதிரி தனது சட்டப்பையில் வைத்திருந்த ரூபாய் நோட்டுகள் ரூ.30430/—ஐ ஆய்வாளர் கைப்பற்றினார் என்றால் சரிதான். நான் ஆய்வாளர் விசாரணையில் 13.30 மணிக்கு காவல் ஆய்வாளரிடம் சம்பவ இடத்தில் கண்காணித்ததாக சொல்லியுள்ளேன் என்றாலும் முன் விசாரணையில் 11.30 மணிக்கு ஆய்வாளர் கைது செய்தார் என்றும் குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் இதில் எது சரியானது என்றால் 11.30 மணி என்பதுதான் சரியாகும். எதிரியை கைது செய்தபோது பாட்டில்களின் மூடி திறந்த நிலையில் இருந்தது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பாட்டில்களை யார் யார் முகந்து பார்த்தோம் என்றால் ஆய்வாளர் மட்டும் முகர்ந்து பார்த்தார். முகர்ந்து பார்த்தால் எல்லாருக்கும் கண் எரிச்சல் குமட்டல் ஏற்படும். கண் எரிச்சல் குமட்டலுக்கும் யாரும் எந்த மருத்துவ சிகிச்சையும் மேற்கொள்ளவில்லை. நாங்கள் யாரும் மருத்துவ சிகிச்சை எடுத்துக் கொள்ளாததால் நாங்கள் முகர்ந்து பார்க்கவில்லை என்றாலும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. கும்பகோணம் சென்னை பிரதான சாலையில் உள்ள டாஸ்மாக் கடையை தான் இவ்வழக்கில் கூறியுள்ளோம் என்றால் சரிதான். அந்த பகுதி மக்கள் நடமாட்டம் உள்ளது என்றால் சரிதான். வெளிநபர்களை யார் யார் விசாரித்து சாட்சியாக வரவில்லை என்றால் பெயர் குறிப்பிட்டு தெரியாது. ஆய்வாளர் கைப்பற்றிய தொகையில் ரூ.2000/— நோட்டு 15 நோட்டுகளும், ரூ.100 ரூபாய் நோட்டுகள் 4ம் , ரூ.10 ரூபாய் நோட்டு 3ம்

என்றால் சரிதான். பாட்டில் விற்பனை செய்பவர்கள் ரூ.2000/– நோட்டுக்கள் வைத்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் எதிரியிடமிருந்து ஆய்வாளர் இந்த வழக்கு தடய பொருட்களை கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் எதிரியிடமிருந்து ஆய்வாளர் இந்த வழக்கு தொகை ரூ.30430/– ஐ சாராய விற்பனை செய்த பணம் அல்ல என்றாலும் எதிரி கையில் வைத்திருந்த சொந்த சேமிப்பு பணத்தை கைப்பற்றினார் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் வைத்திருந்த தடய பொருட்களை இந்த வழக்கில் சேர்த்து வழக்கு பதிவு செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

Sd/– P. Rangeswari,

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர். (FAC)**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**
**THIRUVIDAIMARUTHUR**

| | | | | |
|---|---|---|---|---|
| Calender | : | | | |
| Miscellaneous | : | | | |
| Preliminary Register | : STC.227/2019 | | | |
| Sessions | : | | | |
| Deposition of Witness for | : LW–1/PW– 1 | | | |
| Name | : | Village: தஞ்சாவூர் | | |
| சண்முகசுந்தரம்(சிறப்பு உதவி ஆய்வாளர்) | | Age | :59 | |
| Father's/Husband's Name | : மாணிக்கவாசகம் | Taluk | : | |
| Nationality | : Indian | Religion | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 11.02.2026**

சாட்சியை மதுவிலக்கு அமல் பிரிவு தலைமை காவலர் திரு. அருள்செல்வம் என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜரில் இல்லை. அவரது தரப்பில் 317 குவிமுச பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

<u>**முதல் விசாரணை:**</u>

நான் தற்போது தஞ்சாவூர் சரக ரோந்து கண்காணிப்பு பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு கும்பகோணம் மதுவிலக்கு அமல் பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்தபோது 01.09.2017 ம் தேதி காலை 11.15 மணியளவில் கும்பகோணம் மதுவிலக்கு அமல் பிரிவு காவல் ஆய்வாளர் கமலக்கண்ணன் மற்றும் நுண்ணறிவு பிரிவு காவல் ஆய்வாளர் ராஜூ நுண்ணறிவு பிரிவு சிறப்பு உதவி ஆய்வாளர் சேது நாராயணனுடன் நானும் தலைமை காவலர் 920 முருகானந்தமும் என்பவரும் திருப்பனந்தாள் காவல் நிலைய சரகத்திற்கு உட்பட்ட பகுதிகளில் மதுவிலக்கு சம்மந்தப்பட்ட குற்றங்களுக்காக ரோந்து சென்றபோது திருப்பனந்தாள் டாஸ்மாக் கடை அருகே

எங்களை கண்டதும் ஓட முயற்சித்தவர் பின்பு பெயர் விலாசம் கேட்டு தெரிந்த ராஜிவ்காந்தி த/பெ. கலியபெருமாள், வடக்கு தெரு, திருப்பனந்தாள் என்பவரை பிடித்தபோது அவரிடம் சுமார் 10லிட்டர் பிடிக்கக்கூடிய பாலிதின் பையில் 5 லிட்டர் பாண்டி மாநில சாராயமும் , 180 எம் எல் Bennis Brandy 24 பாட்டில்களும், 750 king fisher Beer 9 பாட்டில்களும், 375 எம் எல் Block Brandy 7 பாட்டில்களும் சாராயத்தை முகர்ந்து பார்த்தபோது விஷ நெடியுடன் இருந்தது. அவரிடமிருந்து விற்பனை செய்த பணம் ரூ.30430/- பணம் இருந்தது. அரசு அனுமதியோ உரிமமோ இல்லாமல் விற்பனை செய்ததற்காக எதிரியை ஆய்வாளர் 11.30 மணிக்கு காரணம் கூறி கைது செய்தார். மேற்கண்ட தடய பொருட்களை அன்றைய தினம் 11.45 மணிக்கு கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார். வெளி சாட்சிகள் யாரும் முன் வராததால் நானும் தலைமை காவலர் முருகானந்தமும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். அந்த கைப்பற்றுதல் மகசர் அசாஆ1 ஆகும். பாண்டி மாநில சாராயத்தை காவல் ஆய்வாளர் கொட்டி அழித்துவிட்டார். அந்த அழித்தல் மகசரில் நானும் தலைமை காவலர் முருகானந்தமும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் அழித்தல் மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். அந்த அழித்தல் மகசர் அசாஆ 2 ஆகும். பின்பு எதிரியுடன் மற்றும் தடய பொருளுடன் நிலையம் வந்து அன்றைய தினம் 12.30 மணிக்கு குற்ற எண் 463/2017 சட்ட பிரிவுகள் 4(1)(a). 4 (1)(i) r/w 4(1)(A) TNPAct படி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்து எதிரியை பாரா வசம் ஒப்புவித்தார். காவல் ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் பணி செய்த காவல் நிலையத்திற்கும் சம்பவ இடத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 25 கி.மீ இருக்கும். நான் காவல் நிலையத்திலிருந்து எத்தனை மணிக்கு புறப்பட்டேன் என்றால் சுமார் 10

மணியிருக்கும். நான் காவல் நிலையத்திலிருந்து புறப்பட்டு நேரடியாக திருப்பனந்தாள் சென்றேனா என்றால் சரிதான். ரகசிய தகவல் வந்ததால் நேரடியாக திருப்பனந்தாள் சென்றோம். நான் ஆய்வாளர் விசாரணையில் 13.30 மணிக்கு காவல் ஆய்வாளரிடம் சம்பவ இடத்தில் கண்காணித்ததாக சொல்லியுள்ளேன் என்றாலும் முன் விசாரணையில் 11.30 மணிக்கு ஆய்வாளர் கைது செய்தார் என்றும் குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் இதில் எது சரியாது என்றால் 11.30 மணி என்பதுதான் சரியாகும். எதிரியை கைது செய்தபோது பாட்டில்களின் மூடி திறந்த நிலையில் இருந்தது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பாட்டில்களை யார் யார் முகந்து பார்த்தோம் என்றால் நானும் என்னுடன் வந்த காவலரும் ஆய்வாளரும் முகர்ந்து பார்த்தோம். யார் யாருக்கு கண் எரிச்சல் குமட்டல் வந்தது என்றால் எல்லாருக்கும் வந்தது. கண் எரிச்சல் குமட்டலுக்கும் யாரும் எந்த மருத்துவ சிகிச்சையும் மேற்கொள்ளவில்லை. நாங்கள் யாரும் மருத்துவ சிகிச்சை எடுத்துக் கொள்ளாததால் நாங்கள் முகர்ந்து பார்க்கவில்லை என்றாலும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. கும்பகோணம் சென்னை பிரதான சாலையில் உள்ள டாஸ்மாக் கடையை தான் இவ்வழக்கில் கூறியுள்ளோம் என்றால் சரிதான். அந்த பகுதி மக்கள் நடமாட்டம் உள்ளது என்றால் சரிதான். வெளிநபர்களை யார் யார் விசாரித்து சாட்சியாக வரவில்லை என்றால் பெயர் குறிப்பிட்டு தெரியாது. ஆய்வாளர் கைப்பற்றிய தொகையில் ரூ.2000/– நோட்டு 15 நோட்டுகளும், ரூ.100 ரூபாய் நோட்டுகள் 4ம் , ரூ.10 ரூபாய் நோட்டு 3ம் என்றால் சரிதான். பாட்டில் விற்பனை செய்பவர்கள் ரூ.2000/– நோட்டுக்கள் வைத்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் எதிரியிடமிருந்து ஆய்வாளர் இந்த வழக்கு தடய பொருட்களை கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் எதிரியிடமிருந்து ஆய்வாளர் இந்த வழக்கு தொகை ரூ.30430/– ஐ சாராய விற்பனை செய்த பணம் அல்ல என்றாலும் எதிரி கையில் வைத்திருந்த சொந்த சேமிப்பு பணத்தை கைப்பற்றினார் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் வைத்திருந்த தடய

பொருட்களை இந்த வழக்கில் சேர்த்து வழக்கு பதிவு செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

Sd/- P. Rangeswari,

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர். (FAC)**